# வேளாண்மைத் துறை

## புதிய வழிமுறைகள்:

1) விவசாயத்தில் புதிய தொழில் நுட்பங்களை கொண்டு வர செயல் விளக்கங்களை செய்தல் மற்றும் அதன் மூலம் அதனை சுற்றி உள்ள நிலங்களில் பயன் பெறச் செய்தல்.
2) செம்மை நெல் சாகுபடி முறையில் அதிக பரப்பில் நெற்பயிரிடுதல்.
3) இயற்கை வளங்களை பயன் படுத்தி நுண்ணூட்ட சத்து மற்றும் நுண்ணூட்ட பூச்சி கொல்லிகளை பயன்படுத்துதல்.
4) தேவையான இடுபொருள்களை தக்க சமயத்தில் விநியோகித்தல்.
5) விவசாயிகளுக்கு நிலம் மற்றும் நீர் ஆகியவற்றால் பெறும் உற்பத்தி திறன் மற்றும் வருவாயை அதிகரித்தல்.

## திட்டம்:

- அதிக நீர் பயன்படுத்தி குறைந்த இலாபம் தரும் பயிர் செய்வதிலிருந்து குறைந்த நீரை பயன்படுத்தி அதிக இலாபம் பெறும் பயிர் செய்ய வணிகபயிர் போன்ற மாற்று பயிரிடுதல்.
- பதிவு செய்யப்பட்ட ayacut-க்கும் பாசனம் பெறும் ayacut-க்கும் உள்ள இடைவெளியை பாசன பயிர்கள் பயிரிட்டு நிரப்புதல்.
- புதிய உற்பத்தி தொழில் நுட்பங்களை பயன்படுத்தி விவசாயத்தில் உற்பத்தி திறனை அதிகரித்தல்.
- பண்ணை கருவிகள் விநியோகித்தல் மற்றும் மேம்படுத்தப்பட்ட இயந்திர மயமாக்குதல்.
- முக்கிய பயிர் வளர்ச்சி நாட்களில் விவசாயிகளை தொடர்பு கொள்ளுதல்.
- நீர்வள நிலவள நாட்களில் விவசாயிகளை தொடர்பு கொள்ளுதல்.
- கருத்து உருவாக்குவர்களை இனம் கண்டு பயன்படுத்துதல்.
- விவசாயிகள் மற்றும் களபணியாளர்களுக்கு பயிற்சி அளித்தல்.
- தகவல் மற்றும் விளம்பர நிகழ்வுகளை பலப்படுத்துதல் புதிய தொழிற்நுட்ப யுத்திகளை அறிய வெளி இடங்களுக்கு சென்று வருதல்.
- ஆய்வு செய்தல் மற்றும் சாதனை குறித்த அறிக்கைகளை தயாரித்தல்

## செயல்பாடுகளுக்கான திட்ட கூறுகள்:

செயல்பாடுகளுக்கான மேம்படுத்தப்பட்ட கூறுகள் கீழ்கண்டவற்றின் அடிப்படையில் நடைமுறைபடுத்தப்படுகிறது.

1) கூட்டு நடை பயணம் ஆய்வுகள் வெளிப்பாட்டில் களப்பணிகளில் உள்ள பிரச்சனைகளை சந்தை வாய்ப்பின் அடிப்படையில் நீர் பயனீட்டாளர்களின் சங்கங்களின் கோரிக்கைகள்.
2) விவசாய சுற்றுசூழலுக்கு தகுந்தவாறு.

## திட்ட பணிகள்:

2007–08–ம் ஆண்டில் செயல்படுத்தப்பட்ட பணிகளை கீழ்கண்டவாறு வகைப்படுத்தலாம்.

1) செயல்விளக்க முறைகள்.
2) முக்கியமான ஈடு பொருட்களை விநியோகித்தல்.

பண்ணை கருவிகள் மற்றும் உபகரணங்களை விநியோகித்தல்.

3) தகவல் தொடர்பியல் மேற்கண்ட பணிகள் கூட்டு நடை பயணம் ஆய்வு மற்றும் கலந்துரையாடல் வழியாக அந்த உபவடிநிலங்களில் உள்ள உண்மை நிலை மற்றும் கோரிக்கைகள் ஆகியவற்றை கொண்டு முடிவு செய்யப்படுகின்றது.

## செயல் விளக்கம்:

ரூ.307.288 இலட்சம் மதிப்பீட்டில் 14475 *ha* பரப்பளவில் செயல் விளக்க பண்ணைகள் நவீன உற்பத்தி தொழில் நுட்பங்களை விரைவாக பரப்பும் வகையில் துறையின் நேரடி மேற்பார்வையில் தொழில் நுட்ப உதவியுடன் கீழ்கண்ட பயிர்களுக்கு செயல்படுத்தப்பட்டன.

நவீன உற்பத்தி தொழில் நுட்பங்களை விளக்க விவசாயிகளுக்கு போதிய விளக்கமளித்தல்; தவிர இத்தகைய செயல் விளக்க பண்ணைகளை சுற்றி உள்ள விவசாயிகள் அடுத்த பருவ காலத்தில் இத்தகைய நவீன தொழில் யுக்திகள்ப் பயன்படுத்தி பயிர் செய்ய தூண்டுவதே இதன் நோக்கம் ஆகும். 119907 ha பரப்பளவிற்கு இதனால் பயனடையும்.

மேலும் செயல் விளக்க பண்ணைகளில் முக்கியமான பணிகள் மேற்கொள்ளும் போது கள தினம் மற்றும் அறுவடை விழா நடத்தி உள்ளூர் விவசாயிகள் துறை அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் முன்னிலையில் விளக்கங்களின் அளவை பதிவு செய்தல்.

**முக்கிய இடுபொருட்களை விநியோகித்தல்:** சில முக்கிய இடுபொருட்களின் விலை அதிகமாக உள்ளதாலும் மற்றும் முக்கிய இடுபொருட்கள் பயன்படுத்துவதால் விளைச்சலில் உற்பத்தி திறன் அதிகரிக்கும் என்ற தெளிவு விவசாயிகளுக்கு இல்லாததாலும் பெரும்பாலன

விவசாயிகள் அத்தகைய முக்கிய இடுபொருட்களை உபயோகிக்க தவறுகிறார்கள். எனினும் பரிந்துரை செய்யப்பட்ட இடுபொருட்கள் த விர பிற தொழிற் நுட்பங்களை பயன்படுத்துகின்றனர்.

எனவே, ரூ. 63.145 இலட்சம் மதிப்பீட்டில் விவசாயிக்கு புரிய வைத்து அவர்களை ஊக்கப்படுத்த 41775 ha பரப்பளவில் விவசாயிக்கு தேவையான கீழ்கண்ட முக்கிய இடுபொருட்கள் வழங்கப்பட்டன.

## விவசாய கருவிகள் மற்றும் உபகரணங்கள் விநியோகித்தல்:

ரூ.32.644 இலட்சம் மதிப்பீட்டில் 4666 விவசாய கருவிகள் மற்றும் உபகரணங் கள் நீர்பாசன பயணிடாளர்கள் மற்றும் தனிப்பட்ட விவசாயி அவர்களது தேவையிற்கேற்ப விநியோகிக்கப்பட்டன.

## தகவல் தொடர்பு:

விவசாயிகள், அலுவளர்கள், தமிழ்நாடு வேளாண் பல்கலை கழக விஞ்ஞானிகள், வல்லுனர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள், உலக வங்கி நிபுணர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் அடங்கிய பயிற்சி தள விளக்கம், கருத்தரங்கம், வீடியோ கான்ஃபிரன்ஸ் ஆகியவற்றின் வழியாக விளம்பரம் செய்யப்பட்டது. அச்சடிக்கப்பட்ட விளம்பர பிரசுரங்கள், PAD, POM and Annual Planner ஆகியவை கள அலுவலர்கள் பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டன.

விவசாயத்தில் அதிக உற்பத்தி திறன் மற்றும் அதிக வருமானம் பெற இத்திட்டத்தின் கீழ் உள்ள சேவைகள் உட்கட்டமைப்புகள் மற்றும் தொழில் நுட்பங்களை பயன்படுத்த விவசாயிகளை தூண்டுவதற்காக 330 நீர்வள நிலந ாட்கள் நடத்தப்பட்டன.

நவின பயிற் சாகுபடி தொழிற் நுட்பங்களை பயன்படுத்த 2102 படித்த நவீன யுக்திகளை பயன்படுத்தும் விவசாயிகள் கண்டறியப்பட்டு அவர்கள் வழியாக புதிய கருத்துகள் உள்ளூர் விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டன.

அவ்வபோது விவசாயிகளுக்கு தேவையான தொழிற்நுட்பங்களை எடுத்துரைக்க உள்ளூர் துறை அலுவலர்களுக்கு உதவிடும் வகையில் இந்த விவசாயிகள் ( Opinion makers) பயன்படுத்தப்பட்டனர். 210 வேளாண் விளைபொருள் குழுக்கள் அமைக்கப்பட்டன. அதாவது நெல் – 28, மக்காச் சோளம் – 29, பயறு வகைகள் – 53, நிலக்கடலை – 15, தென்னை – 24, பருத்தி – 9 ஆகியவற்றை விவசாயத்தில் மகசூலில் அதிக விலை பெற அவர்கள் விரும்பும் பயிர் சாகுபடியில் நவீன தொழிற் நுட்பங்களை பயன்படுத்தவும் அப்பயிர்களுக்கு உள்ள சந்தை வாய்ப்பு பற்றி போதிய தெளிவு பெறவும் இத்தகைய வேளாண் விளைபொருள் குழுவினர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.